4. திருவில்லிப்புத்தூர் நகராட்சியின் கோரிக்கையின் மீதும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரது கருத்துருவின் மீதும், நகராட்சி ஆய்வரது பரிந்துரை வரப்பெற்றதும், சட்டத்துறையுடன் கலந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. இதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் எவ்வித பதட்ட நிலையும் ஏற்படவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அறிக்கையைப் பார்த்தேன்; படித்தேன் ; மிகவும் ரசித்தேன் ; மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பென்னிங்டன் மார்க்கெட்டை கையகப்படுத்தி, அதை ஒரு பொது ஸ்தாபனத்திற்காகப் பயன்படுத்த இருப்பதால், அதற்கு நஷ்ட ஈடு கேட்டு கோர்ட்டுக்குப் போகும் சூழ்நிலை இருப்பதால், அதைத் தடுக்க ஒரு தனி சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நன்றி தெரிவித்ததற்கு நன்றி. திரு. தாமரைக்கனியின் கருத்து கனிகின்ற நிலையில் இருக்கிறது.

11) கன்னியாகுமரி மாவட்டம் அரசுத்துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு ரா. கிருஷ்ணன் இருவரும் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள் ; அவர்களில் ஒருவர் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுத் துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மக்களிடையே நிலவும் பதட்ட நிலைக் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 நவம்பர் 10

அறிக்கை.

குமரி மாவட்டத்தில் உள்ள இரப்பர் தோட்ட தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளான ஊதிய மாற்றம், வீட்டு வாடகைப்படி, ஓவர் கிலோ ரேட் ஆகிய கோரிக்கைகளின் மீது 11—10—1979 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்தினால் தனியார் இரப்பர் தோட்டங்களில் உள்ள சுமார் 2,000 தொழிலாளர்களு அரசு இரப்பர் தோட்டங்களில் உள்ள சுமார் 2,030 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர்.

2. நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் மேற்கொண்ட சமரசப் பேச்சு வார்த்தைகளின் பயனாகத் தனியார் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே 24—10—1979 அன்று தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக தனியார் தோட்டங்களில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

3. அரசு இரப்பர் தோட்டங்களைச் சார்ந்த பொது நிறுவனங்களில் உள்ள சுமார் 2,030 தொழிலாளர்களில் சுமார் 1,857 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இந்தப் பிரச்சினை மீது நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். பேச்சு வார்த்தைகளின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களேஅமைச்சரவர்கள் இங்கே வைத்திருக்கிற அறிக்கையிலே தனியார் துறையிலே நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு அரசுத் துறை அதிகாரிகள் கூப்பிட்டுப் பேசி, 12 (3) செட்டில்மென்ட் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதே கோரிக்கைக்காகத்தான் அரசுத் துறையில் இருக்கிற இரப்பர் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். தனியார் துறையில் ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே அரசுத் துறைக்கும் சேர்த்து அதைச் செய்திருக்கலாம். இப்போது கிட்டத்தட்ட 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி, சீக்கிரம் முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே இன்று காலையிலே லேபர் கமிஷனரிடம் சொல்லி, மதுரை டிபுடி லேபர் கமிஷனர் சமரசப் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு விட்டு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, வேலைநிறுத்தம் ஆரம்பித்து ஒரு மாதம் ஆகிறது. ஒரு மாத காலம் ஏறத்தாழ 3,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இதைப்போன்ற கோரிக்கைகள் வரும்போது, தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற ஒப்பந்தத்தை அரசு நிர்வாகமும் ஏற்று, அதன் அடிப்படையிலே அந்த ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்துவது வழக்கம். அதைப் போல இப்போதும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், தனியார் தோட்ட முதலாளிகளுக்கும் இடையே ஏற்படுகின்ற ஒப்பந்தத்தை அரசு நிர்வாகம் ஏற்று அதன் பிறகு அந்த ஒப்பந்தம் செயல்படுவது வழக்கம். (ஆளும் கட்சியில் இருந்தவர்கள் மேசையை தட்டினார்கள். எதிர்க் கட்சியினர் ஷேம் ஷேம் என்று குரல் கொடுத்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் அமைதி காக்க வேண்டும்.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) மேசையைத் தட்டுவதற்கான காரணம் குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, எங்களுக்கு விளக்கம் தேவை, என்ன நடந்தது என்று தெரியவில்லை. அந்தப் பக்கம் ஒரேயடியாக மேசையைத் தட்டுகிறார்கள், என்னவென்று தெரியவில்லை;

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒன்றுமே புரியவில்லை. ஆளும் கட்சிப் பக்கத்திலிருந்து கைதட்டுகிறார்கள்; எதிர்ப்பக்கத்திலிருந்து ஷேம் ஷேம் என்று கத்துகிறார்கள், எங்களுக்கும் என்ன விஷயம் என்று விளக்கிச் சொன்னால் நல்லது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் வந்திருக்கிற எழுத்து மூலத்தின் படி காங்கிரஸ் கட்சியிலிருந்த திரு. இராஜாராம் ரெட்டியார் அவர்கள் ஆளும் கட்சியான அண்ணா